1974 மார்ச் 23]

வர்கள் அல்ல. கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். கேள்வி கேட்கிற நேரத்தில் எந்த ஏரியாவைப் பற்றிய கேள்வியோ அந்த ஏரியாவைச் சேர்ந்த உறுப்பினர்களாகப் பார்த்து வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். எந்தப் பகுதியைப் பற்றிய கேள்வி, எந்தப் பொருள் பற்றிய கேள்வி என்று பார்த்து வாய்ப்புக் கொடுத்து வருகிறேன். எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்றால் ஒன்று, கேள்வியின் எண்ணிக்கையைக் குறையுங்கள் அல்லது, ஒரு மணி நேரம் என்பதை ஒன்றரை மணி நேரமாக அதிகரித்துக் கொடுங்கள்.

திரு. அ. தேவேந்திரன் : ஆளும் கட்சியைச் சார்ந்த எங்களேயும் கொஞ்சம் கவனியுங்கள்.

ஆவாசிப்பேட்டை, மாளந்தூருக்குப் பேருந்துப்பணி

* 590 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண் 101, 101-ஏ பேருந்துகளே பென்னலூர் பேட்டைத் துணைவட்டம், ஆவாசிப்பேட்டை, மாளந்தூர் ஆகிய கிராமங்களின் வழியே திருப்பிவிடும் திட்டம் தற்போது எந்த நிலேயில் உள்ளது?

(இ) இத்திட்டம் எப்போது அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) & (இ) ஆவாசிப் பேட்டையிலிருந்து மாளந்தூர் வரைசெல்லும் பாதை பேருந்து செல் லுவதற்கு ஏற்றதாக இல்லே ; ஆகவே பேருந்துகளே ஆவாசிப்பேட்டை வழியாக திருப்பிவிடுவது இயலாது.

திரு. கா. வேழவேந்தன் : இந்த ஆண்டில் அந்தப் பாதையை சீர் படுத்த வேலே ஆரம்பிக்கப்பட்டு, முடிக்கும் சூழ்நிலே இருக்கிறது. பல கிராமங்களே இணேக்கும் அந்த வழித் தடத்தில் பேருந்துகளே விட நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பாதை செப்பனிடப்பட்ட வுடன் கேள்வியை மீண்டும் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : வினக்கள்–விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]